நீட் மறுதேர்வு வினாத்தாள் கசிந்ததாக வதந்தி

என்டிஏ எச்சரிக்கை

புது தில்லி, ஜூன் 6: இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் மறுதேர்வின் வினாத்தாள் கசிந்ததாக சமூக ஊடகங்களில் பரவிவரும் தகவல்கள் முற்றிலும் பொய்யானது. இதுபோல் வதந்தி பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய தேர்வு முகமை (என்டிஏ) எச்சரித்துள்ளது.

நிகழாண்டு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்காக நாடு முழுவதும் கடந்த மே 3-ஆம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தெரியவந்தது. இதையடுத்து, 22 லட்சம் பேர் எழுதிய இந்தத் தேர்வு ரத்து செய்யப்பட்டு, ஜூன் 21-ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்படவுள்ளது. இந்நிலையில், நீட் மறுதேர்வு வினாத்தாள் கசிந்ததாக சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவி வருகின்றன. இந்தத் தகவல்களை நிராகரித்து, நீட் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை சனிக்கிழமை வெளியிட்ட எக்ஸ் பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் மறுதேர்வின் வினாத்தாள் கசிந்ததாகவும், விலைக்கு விற்கப்படுவதாகவும் சமூக ஊடகங்களில் பரவிவரும் தகவல்களை கவனத்தில் கொண்டுள்ளோம். இவை, முற்றிலும் பொய்யான, மோசடியான தகவல்களாகும். மாணவர்கள் மற்றும் பெற்றோரை ஏமாற்றும் நோக்கில், திட்டமிட்டு செயல்படும் மோசடி கும்பல்களால் பரப்பப்படும் இதுபோன்ற தகவல்களை நம்ப வேண்டாம். மாணவர்கள் மற்றும் பெற்றோரின் பதற்றத்தைப் பயன்படுத்தி, அவர்களிடம் போலியான வினாத்தாள்களை விற்று, பணம் பறிப்பதே அந்தக் கும்பல்களின் நோக்கம். இத்தகைய செயலில் ஈடுபடும் சமூக ஊடக கணக்குகளைக் கண்டறிந்து, அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கும் பணிகளில் என்டிஏ தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மாணவர்களை ஏமாற்றும் உள்ளடக்கங்களை வெளியிடுவது கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய உள்ளடக்கங்களை வெளியிடுவோர், தீவிர நடவடிக்கைக்கு உள்ளாவர். மாணவர்கள் வதந்திகளை நம்பாமல், என்டிஏ தனது வலைதளம் மற்றும் சேனல்கள் மூலம் வெளியிடும் அதிகாரபூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய்க்கு ஒரே மாதிரியான பேக்கேஜிங் கட்டாயம்: மத்திய அரசு

புது தில்லி, ஜூன் 6: சமையல் எண்ணெய் நிறுவனங்கள் இனி ஒரே மாதிரியான பேக்கேஜிங் அளவுகளை கட்டாயம் பின்பற்ற மத்திய அரசு உத்தரவிட்டது.

பல்வேறு நிறுவனங்களால் விற்பனை செய்யப்படும் சமையல் எண்ணெய் விலையை ஒப்பிட்டு நுகர்வோர் எளிதாக வாங்கும் நோக்கில் இதற்கான விதிகளை மத்திய நுகர்வோர் துறை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து நுகர்வோர் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 200 மில்லி லிட்டர்/கிராம், 500 மில்லி லிட்டர்/கிராம், 1லிட்டர்/கிலோ, 2 லிட்டர்/கிலோ, 3 லிட்டர்/கிலோ, 4 லிட்டர்/கிலோ, 5 லிட்டர்/கிலோ, 15 லிட்டர்/கிலோ மற்றும் 20 லிட்டர்/கிலோ ஆகிய 9 வகையான பேக்கேஜிங் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பனை, சூரியகாந்தி, நிலக்கடலை, கடுகு, மக்காச் சோளம் உள்ளிட்டவை மூலம் சமையல் எண்ணெய்யை தயாரிக்கும் நிறுவனங்கள் இந்த அளவைப் பின்பற்றி இனி பேக்கேஜிங் செய்யவுள்ளன.

200 மில்லி லிட்டர் அல்லது 200 கிராமுக்கு குறைவான அளவைக் கொண்ட சமையல் எண்ணெய் பேக்கேஜிங் முறைக்கு இந்த விதியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. குறைந்த விலையில் இந்த வகையான சமையல் எண்ணெய் கிடைப்பதை உறுதி செய்ய விலக்களிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி வெளிநாட்டிலிருந்து சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் இந்த அளவுகோல் பொருந்தும். அடுத்த 3 மாதங்களுக்குள் அனைத்து நிறுவனங்களும் இதைப் பின்பற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அணுசக்தித் துறையில் பொருத்தமான கூட்டாளி இந்தியா

அமெரிக்க அணுசக்தி கூட்டமைப்புத் தலைவர்

வாஷிங்டன், ஜூன் 6: 'வலுவான விநியோகச் சங்கிலி, சிறந்த பொறியியல் நிபுணர்களைக் கொண்டுள்ள இந்தியா அசுர வளர்ச்சிக்குத் தயாராக உள்ள அணுசக்தித் துறையில் அமெரிக்காவுக்கான சிறந்த பொருத்தமான கூட்டுறவு நாடாக இருக்கும்' என்று அமெரிக்க அணுசக்தி கூட்டமைப்பான அணுசக்தி நிறுவன (என்இஐ) தலைவர் மரியா கோர்ஸ்னிக் தெரிவித்தார்.

அணுசக்தித் துறையில் தனியாரை அனுமதிக்கும் வகையில் நிறுவனங்களுக்கான கடுமையான பொறுப்பு விதிகளை மத்திய அரசு தளர்த்தியுள்ள நிலையில், இந்தியாவில் அணுசக்தித் துறையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளை ஆராய்வதற்காக மரியா கோரஸிங்க் தலைமையில் அமெரிக்க அணுசக்தித் துறையைச் சேர்ந்த 20 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழு அண்மையில் இந்தியா வந்து ஆய்வு மேற்கொண்டது.

இதுகுறித்து அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் மரியா கோர்ஸ்னிக் அளித்த பேட்டி: இந்தியா வலுவான விநியோகச் சங்கிலியையும், மிக வலுவான பொறியியல் நிபுணர்களையும் கொண்டுள்ளது. மேலும், அணுசக்திப் பயன்பாட்டுக்கு இந்தியா புதிய நாடு அல்ல. இந்தத் துறையில் இந்தியா ஏற்கெனவே சிறந்து விளங்கி வருகிறது. எனவே, இந்தத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் உள்பட அசுர வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் அமெரிக்காவின் சிறந்த கூட்டுறவு நாடாக இந்தியா இருக்கும். அமெரிக்கா இந்தத் துறையில் பல ஆண்டுகளாக தேசிய ஆய்வகங்களில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்டுள்ளது. இந்தக் கண்டுபிடிப்புகளை தற்போது சர்வதேச சந்தைக்கு கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

மரியா கோர்ஸ்னிக்

இத்தகைய சூழலில், அமெரிக்காவுக்கு பொருத்தமான கூட்டுறவு நாடாக இந்தியா இருக்க முடியும் என்பது எனது எண்ணம். ஏனெனில், இரு நாடுகளும் வலுவான திறன்களைக் கொண்டுள்ளன. தற்போது இரு நாடுகளும், அணுசக்தித் துறையின் வளர்ச்சிக்காக தீவிர திட்டங்களை வகுத்துள்ளன. இது இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தித் தரும்.

குறிப்பாக, இந்தியா தனது அணு மின் உற்பத்தித் திறனை தற்போதைய 8.78 ஜிகா வாட் அளவிலிருந்து வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகா வாட் உற்பத்தி அளவுக்கு அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இதே காலகட்டத்தில் அமெரிக்காவும் தனது அணு மின் உற்பத்தித் திறனை 100 ஜிகா வாட் அளவிலிருந்து 400 ஜிகா வாட் அளவுக்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இதுவே, இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பாகும். மேலும், சிறிய ரக அணு உலைகளுக்குத்தான் (எஸ்எம்ஆர்) சிறந்த எதிர்காலம் உள்ளது. எஸ்எம்ஆர் மேம்பாட்டுக்கென அமெரிக்க மிகப் பெரிய அளவில் முதலீடுகளைச் செய்துள்ளது. எஸ்எம்ஆர் மேம்பாட்டிலும் இரு நாடுகளும் இணைந்து பணியாற்ற அதிக வாய்ப்புகள் உள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்த பொறுப்புடைமை சார்ந்த சிக்கல் காரணமாக, இந்தியா - அமெரிக்கா இடையேயான அணுசக்தி ஒத்துழைப்பு சுணக்கமடைந்திருந்தது.

தற்போது, நிறுவனங்களின் பொறுப்புடைமையை தளர்த்தி இந்தியா கொண்டுவந்துள்ள 'சாந்தி' (இந்தியாவை மாற்றியமைப்பதற்கான அணுசக்தியின் நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டுச் சட்டம்) சட்டம், இந்தியா - அமெரிக்கா இடையே சுணக்கமடைந்த அணுசக்தி ஒத்துழைப்பை மீட்டெடுக்க உதவும்.

இரு நாடுகளும் இத்துறையில் கூட்டுறவை வலுப்படுத்தும் வகையில், வணிக ரீதியில் மட்டுமன்றி, அணுசக்தி தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான செயல்திட்டத்தையும் வகுப்பது முக்கியமானதாகும் என்றார்.

வளர்ச்சியால் புதிய வாய்ப்புகள்

ராஜ்நாத் சிங்

லக்னௌ, ஜூன் 6: நாட்டின் வியக்கத்தக்க வளர்ச்சிப் பயணம் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதோடு, 140 கோடி இந்தியர்களின் விருப்பங்களுக்கு வலுசேர்த்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'பொருளாதார ரீதியாக பல நாடுகள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டு வருகின்றன.

இந்தச் சூழலில், உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் முக்கிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது.

2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 7.7 சதவீதம் வளர்ச்சியடைந்தது; குறிப்பாக நான்காம் காலாண்டில் இந்த வளர்ச்சி விகிதம் 7.8 சதவீதமாக அதிகரித்தது. இது சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் என்ற மந்திரத்தின் மூலம், கடந்த 12 ஆண்டுகளில் கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் பொருளாதார உறுதித்தன்மையையும், உள்ளார்ந்த வலிமையையும் எடுத்துரைக்கிறது.

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ், ஸ்திரத்தன்மை, நம்பிக்கை, நீடித்து நிலைக்கும் தன்மை ஆகியவற்றுடன் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இணைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த இந்தியா எனும் தொலைநோக்குப் பார்வையை நோக்கி இந்தியா முன்னேறி வரும் வேளையில், இந்த வியக்கத்தக்க வளர்ச்சிப் பயணம் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதோடு, 140 கோடி இந்தியர்களின் விருப்பங்களுக்கு வலுசேர்த்துள்ளது' என்று தெரிவித்தார்.

12-ஆம் வகுப்பில் மதிப்பெண்கள் குறைவாகப் பெற்ற மாணவர்களுக்கும் வாய்ப்பு

ஐஐடி ரூர்க்கி

புது தில்லி, ஜூன் 6: 12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் தகுதி மதிப்பெண்களைவிட குறைவாகப் பெற்ற மாணவர்களும் கலந்தாய்வில் பங்கேற்று ஜேஇஇ தரவரிசை அடிப்படையில் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என ஐஐடி ரூர்க்கி சனிக்கிழமை தெரிவித்தது.

ஐஐடி தில்லி, ஐஐடி மும்பை, ஐஐடி சென்னை, ஐஐடி ரூர்க்கி உள்பட நாடு முழுவதும் உள்ள 23 ஐஐடிக்களில் ஜேஇஇ முதன்மை (அட்வான்ஸ்ட்) தேர்வின் மதிப்பெண்கள் அடிப்படையில் இளநிலைப் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஜேஇஇ முதல்நிலை (மெயின்) தேர்வில் நிர்ணயிக்கப்பட்ட கட்-ஆஃப் மதிப்பெண்களைப் பெறும் மாணவர்கள் மட்டுமே ஜேஇஇ முதன்மை தேர்வெழுத அனுமதிக்கப்படுவர். ஜேஇஇ முதல்நிலை தேர்வை தேசியதேர்வுமுகமையும்(என்டிஏ),ஜேஇஇ முதன்மை தேர்வை 7 மண்டல ஐஐடிக்களும் சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் நடத்துகின்றன. ஜேஇஇ முதன்மை தேர்வின் தரவரிசை அடிப்படையில் ஐஐடிக்களில் விண்ணப்பிக்கும் பொது/ஓபிசி-கிரீமி லேயர் பிரிவைச் சேராதவர்கள்/பொது-பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு நிகரான தேர்வில் 75 சதவீத மதிப்பெண்களை பெற்றிருக்க வேண்டும். எஸ்சி/ எஸ்டி/ மாற்றுத் திறனாளி பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களாக இருப்பின், 65 சதவீத மதிப்பெண்களை பெற்றிருக்க வேண்டும்.

இந்நிலையில், நிகழாண்டு ஐஐடிக்களில் விண்ணப்பிக்கும் மாணவர்களின் சேர்க்கை நடைமுறை குறித்து ஜேஇஇ முதன்மை தேர்வை நடத்திய ஐஐடி ரூர்க்கி வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், '12-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் 75 சதவீதம் அல்லது 65 சதவீத மதிப்பெண்களுக்கு குறைவாக பெற்றிருக்கும் மாணவர்கள் நீங்கள் விரும்பும் கல்லூரிகள்/படிப்புகளை தற்போது தேர்வு செய்யலாம். ஜேஇஇ முதன்மை தேர்வின் தரவரிசை அடிப்படையில் உங்களுக்கான தற்காலிக இடங்கள் ஒதுக்கப்படும்.

ஆனால், ஜூலை 15-ஆம் தேதிக்குள் திருத்தப்பட்ட மதிப்பெண்களை (பிரிவின் அடிப்படையில் 75 சதவீதம் அல்லது 65 சதவீதம்) orgjee@iitr.ac.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும். அதன்பிறகு கலந்தாய்வின் 4-ஆவது சுற்றில் உங்களுக்கான இடங்கள் ஒதுக்கப்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல்முறையாக 'திரையில் மதிப்பிடுதல்' (ஓஎஸ்எம்) முறையில் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில் பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்ததாக மாணவர்களும் பெற்றோர்களும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், கல்லூரிகளில் சேர்க்கை தொடர்பாக ஐஐடி ரூர்க்கி விளக்கமளித்துள்ளது.

பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI

சுவர்ணபுரி கிளை, கோயம்புத்தூர் மண்டலம் : 6/1, சுதா டவர்ஸ், மெய்யனூர் மெயின் ரோடு, சேலம் - 636 004, போன் : 0427-2334452, மின்னஞ்சல் : Swarnapuri.Coimbatore@bankofindia.bank.in

சுவாதீன அறிவிப்பு

(அசையாச் சொத்திற்காக)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி பிரிவு 13(12)-ன் கீழ் விதி 3-ன் படி **பாங்க் ஆப் இந்தியா, கோயம்புத்தூர் மண்டலம், சுவர்ணபுரி கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் இவ்வங்கியிலிருந்து கடன்பெற்ற **கடன்தாரர் : 1. M/s. ஸ்ரீ ஜெயலட்சுமி டிரேடர்ஸ், உரிமையாளர் : திரு.ஜெயகாந்தன்,** பதிவு அலுவலக முகவரி : எண்.69/162, காட்டுவளவு, வேப்பிலைபட்டி புதூர், சேலம் - 636 202, **2. திரு.ஜெயகாந்தன் (உரிமையாளர்),** த/பெ. ராமசாமி, எண்.69/162, காட்டுவளவு, வேப்பிலைபட்டி புதூர், குமாரபாளையம், சேலம் - 636 202, **3. திரு.ராமசாமி,** த/பெ.பெருமாள் உடையார் **(உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** 69/162, காட்டுவளவு, வேப்பிலைபட்டி புதூர், வேப்பிலைபட்டி, சேலம் - 636 202, **4. திருமதி. ஈஸ்வரி,** க/பெ.சித்தையன் **(உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** எண்.14/48, சங்கர் நகர், ஹஸ்தம்பட்டி, சேலம் - 636 007, **5. திருமதி. பிரியதர்ஷினி,** க/பெ.ஜெயகாந்தன் **(உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** 69/162, காட்டுவளவு, வேப்பிலைபட்டி புதூர், வேப்பிலைபட்டி, சேலம் - 636 202, **6. திருமதி.சாந்தி,** த/பெராமசாமி **(உத்தரவாதமளித்தவர்),** எண்.7/10A, வாய்க்கால்பட்டறை, அல்லிக்குட்டை, சேலம் - 636 003 மற்றும் **7. திருமதி.ஜெயலட்சுமி,** க/பெ. அருண் **(உத்தரவாதமளித்தவர்),** எண்.300, மத்திய சிறைச்சாலை பின்புறம், ஹஸ்தம்பட்டி, சேலம் - 636 007 என்பவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய கேட்பு ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **819025130000002 : ரூ.6,10,31,472.24** மற்றும் **22.11.2025** தேதியிலிருந்து மாதாந்திரக் கணக்கீட்டிலான **9.00%** வருட வட்டி (மாறுபடும்) மற்றும் **24.11.2025** நாளிட்ட கேட்பு ஓலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

கடன்தாரர்கள் மேற்கண்ட தொகையினை செலுத்தத் தவறியதால் மேற்கண்ட சட்ட விதிகளின் பிரிவு 13(4) மற்றும் விதி 8ன் கீழ் **03.06.2026**ம் தேதி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக சுவாதீனம் செய்து உள்ளார் என்பதை கடன்தாரர்கள் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கிறார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்கள் இந்தச் சொத்து குறித்து எந்த தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது. அவ்வாறு மேற்கொண்டால் **பேங்க் ஆப் இந்தியா, சுவர்ணபுரி கிளைக்கு ரூ.6,10,31,472.24** + மேற்குறிப்பிட்டப்படி பொருந்தும் வட்டி மற்றும் கட்டணங்கள் சேர்த்து செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உட்படும் என இதன் மூலம் அறிவிக்கிறார்.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

(கேட்பு ஓலை பெறப்பட்ட பின் மேற்சொன்ன நிலுவைத் தொகைக்காக, தொகை ஏதும் செலுத்தியிருப்பின் கணக்கு நேர்செய்யும் போது/முடிக்கும்போது கருத்தில் கொள்ளப்படும்).

அசையாச் சொத்தின் விபரம்

சொத்து I : நிலம் மற்றும் கட்டிடம் அமைந்த, சேலம் கிழக்குப் பதிவு மாவட்டம், வாழப்பாடி சார் பதிவு மாவட்டம், சேலம் மாவட்டம், சேலம் தாலூகா, வேப்பிலைப்பட்டி கிராமம், சர்வே எண்.22/6 ல் 1.19 ஏக்கர், சர்வே எண்.22/6 ல் 0.50 ஏக்கர், சர்வே எண்.25/3B ல் 0.55 ஏக்கர் என மொத்தம் 2.24 ஏக்கர், சர்வே எண்.25/3B ல் 0.07 ஏக்கர் பொது வழித்தடத்தில் பாதி பங்கு, சர்வே எண்.25/3B ல் 0.05 ஏக்கர் பொதுக் கிணறில் பாதிப் பங்கு. திரு.R.ராமசாமி பெயரிலுள்ள சொத்தின் **எல்லைகள் விபரம் : மேற்சொன்ன சர்வே எண்கள், தற்போதைய உட்பிரிவின்படி சர்வே எண்.22/6C, 25/3B3B : சர்வே எண்.22/6 ல் உள்ள 1.19 ஏக்கருக்கு எல்லைகள் (உட்பிரிவின்படி 22/6C) :** வடக்கே - திரு. மாரிமுத்து நிலம், தெற்கே - ரோடு, கிழக்கே - அட்டவணை A யின் லைஃப் எஸ்டேட் சொத்து, மேற்கே - திரு.அய்யாமுத்துவின் நிலம். **சர்வே எண்.25/3B ல் உள்ள 0.55 ஏக்கருக்கு எல்லைகள் (உட்பிரிவின்படி 22/3B3B) :** வடக்கே - திரு. அய்யாமுத்துவின் நிலம் மற்றும் பொதுக் கிணறு பகுதி, தெற்கே - திரு. செல்வம் நிலம், கிழக்கே - திரு. ஆறுமுகம் நிலம், மேற்கே - திரு. செல்வம் நிலம். **சர்வே எண்.22/6 ல் உள்ள 0.50 ஏக்கருக்கு எல்லைகள் (உட்பிரிவின்படி 22/6C) :** வடக்கே - திரு.மாரிமுத்துவின் நிலம், தெற்கே - ரோடு, கிழக்கே - இடுகாடு, மேற்கே - திரு.ராமசாமி நிலம். **சர்வே எண்.25/3B ல் உள்ள 0.07 ஏக்கருக்கு (வழித்தடம்) எல்லைகள் (உட்பிரிவின்படி 22/3B3B) :** வடக்கே - ரோடு, தெற்கே - பொதுக் கிணறு பகுதி, கிழக்கே - திரு.அய்யாமுத்து நிலம், மேற்கே - திரு. செல்வம் நிலம். **சர்வே எண்.25/3B ல் உள்ள 0.05 ஏக்கருக்கு (கிணறு) எல்லைகள் (உட்பிரிவின்படி 22/3B3B) :** வடக்கே - திரு. அய்யாமுத்துவின் நிலம் மற்றும் பொதுக் கிணறு, தெற்கே - திரு. ராமசாமியின் நிலம், கிழக்கே - திரு. அய்யாமுத்து நிலம், மேற்கே - திரு. செல்வம் நிலம்.

அசையாச் சொத்து விபரம் : சொத்து II : நிலம் மற்றும் கட்டிடம் அமைந்த, சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், எண்.1 இணை சார் பதிவு மாவட்டம், சேலம் மாவட்டம், சேலம் டவுன், குமாரசாமிபட்டி கிராமம், மிட்டா சர்வே எண்.241/1 ல் 1.46 ஏக்கர் மற்றும் மிட்டா சர்வே எண்.241/2 ல் உள்ள 3.74 ஏக்கர், மொத்தம் 5.20 ஏக்கர், நகராட்சி டவுன் சர்வே எண்.716, இதன் பழைய டவுன் சர்வே எண்.490/1 மற்றும் 490/2, மறு தீர்வின்படி வார்டு-C, பிளாக்-22, டவுன் சர்வே எண்.37, 5.20 ஏக்கர், இதில் வடபுற பகுதி 1.46 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, ரோடுகள் அமைக்கப்பட்ட `சங்கர் நகர்' எனும் லேஅவுட்டில் அடங்கிய மனை எண்.27 ன் 3190 சதுரடி, திருமதி. ஈஸ்வரியின் பெயரிலான வீட்டு மனையின் **எல்லைகள் விபரம் : 3190 சதுரடிக்கு எல்லைகள் :** வடக்கே - பிளாட் எண்.14, தெற்கே - 30 அடி அகல கிழமேல் ரோடு, கிழக்கே - பிளாட் எண்.26, மேற்கே - பிளாட் எண்.28. **அசையாச் சொத்து விபரம் : சொத்து III :** சேலம் கிழக்குப் பதிவு மாவட்டம், இணை எண்.1 சார் பதிவு அலுவலகம், சேலம் மாவட்டம், சேலம் தாலூகா, வாய்க்கால் பட்டறை, அம்மாபேட்டை கிராமம், பழைய சர்வே எண்.80/2, வார்டு AK, பிளாக்-9, டவுன் சர்வே எண்.6,5 இரு இனங்கள் சேர்ந்த மொத்தம் 0.19 ஏக்கர் நிலம், திருமதி. K.பிரியதர்ஷினியின் பெயரிலமைந்த சொத்தின் **எல்லைகள் விபரம் : இனம்-1 - டவுன் சர்வே எண்.6 ல் உள்ள 0.10 ஏக்கருக்கு எல்லைகள் :** வடக்கே - 30 அடி அகல பொது ரோடு மற்றும் சர்வே எண்.80/1 ல் உள்ள வர்மா சிட்டி பிளாட்டுகள், தெற்கே - 2வது இனச் சொத்து நிலம் மற்றும் R.ஜெயபிரகாஷின் நிலம், கிழக்கே - கௌரி அணை வாய்க்கால், மேற்கே - சர்வே எண்.83 (P) திரு.M.குமாரின் நிலம். **இனம்-2, டவுன் சர்வே எண்.5ல் உள்ள 0.09 ஏக்கருக்கு எல்லைகள் :** வடக்கே - சர்வே எண்.80/2 ல் உள்ள இனம்-1 நிலச் சொத்து, தெற்கே - பொதுக் கிணறு, கிழக்கே - கௌரி அணை வாய்க்கால், மேற்கே - திரு. R. ஜெயபிரகாஷின் நிலம்.

சொத்து IV : சேலம் கிழக்குப் பதிவு மாவட்டம், இணை எண்.1 சார் பதிவு அலுவலகம், சேலம் மாவட்டம், சேலம் தாலூகா, வாய்க்கால் பட்டறை, அம்மாபேட்டை கிராமம், பழைய சர்வே எண்.83(P), வார்டு AK, பிளாக்-9, டவுன் சர்வே எண்கள் 97/1, 96, 2/2 மொத்தம் 0.21¼ ஏக்கர் நிலம், திருமதி. K.பிரியதர்ஷினியின் பெயரிலமைந்த சொத்தின் **எல்லைகள் விபரம் : இனம்-1, டவுன் சர்வே எண்.97/1 ல் உள்ள 0.14¼ ஏக்கருக்கு எல்லைகள் :** வடக்கே - திரு. வாசுதேவன் நிலம் மற்றும் வர்மா சிட்டியின் 30 அடி அகல பொது ரோடு, தெற்கே - திரு. பழனி உடையாரின் நிலம், கிழக்கே - திருமதி. பிரியதர்ஷினியின் நிலம் மற்றும் திரு. ஜெயபிரகாஷின் நிலம், மேற்கே - திருமதி. பிரியதர்ஷினி மற்றும் அவரது சகோதரிக்கு பொதுவில் சொந்தமான சர்வே எண்.83 (P) ல் உள்ள நிலம். **இனம்-2, டவுன் சர்வே எண்.96ல் உள்ள 0.03 ஏக்கருக்கு எல்லைகள் :** வடக்கே - 3வது இனச் சொத்து, தெற்கே - 10 அடி அகல வழித்தடம், கிழக்கே - திரு.குமாரின் மீத நிலம், மேற்கே - தென்வடல் பொது வழித்தடம். **இனம்-3, டவுன் சர்வே எண்.2/2ல் உள்ள 0.04 ஏக்கருக்கு எல்லைகள் :** வடக்கே - திரு. வெற்றிவேலின் நிலம் மற்றும் வீடு, தெற்கே - 2வது இனச் சொத்து, கிழக்கே - சர்வே எண்.83(P) ல் உள்ள திரு. குமாரின் மீதமுள்ள நிலம், மேற்கே - தென்வடல் பொது வழித்தடம்.

தேதி : 03.06.2026 அதிகாரம் பெற்ற அலுவலர்
இடம் : சுவர்ணபுரி பாங்க் ஆப் இந்தியா

"முந்தைய அனுப்பப்பட்ட / வழங்கப்பட்ட சுவாதீன அறிவிப்பு தொழில்நுட்பக் காரணங்கள் திரும்பப்பெறப்படுகிறது".

அடையாள சுவாதீன அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட், 4/10, மைத்ரீ டவர், செம்மனஞ்சேரி ஒஎம் முதன்மை சாலை, சென்னை-600068.

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், ICICI பேங்க் லிட்-இன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகளில் விதி 3-இன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாள்களுக்குள் அதில் காணும் கடன் பாக்கியைச் செலுத்துமாறு கோரினார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்களுக்கும், பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழ்க்காணும் தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையான கவாதினத்தில் (Symbolic Possession) எடுத்துக் கொண்டுள்ளார். குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழ்வரும் அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரேடு பரிவர்த்தனையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது ICICI பேங்க் லிமிடெட்-க்குச் செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிக்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்	கடன்தாரர்(கள்) பெயர் / கடன் கணக்கு எண்	சொத்து விபரம் / அடையான கவாதின நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள் / கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூ.)	கிளையின் பெயர்
1.	ஜஸ்லஸ்யா லட்சுமி, சுமுகார், D வார்த்திக் ரகுநாத் (காலம் சென்றவர்) தனசேகரன், K.A. தேவ் விநாகன் (இளவல்) K.A காருண்யா ஸ்ரீ (இளவல்) ஜஸ்லஸ்யா லட்சுமி, சந்திரகலா/ கதவு எண் . 66 66/1 பிளாட் எண் 59, வார்டு Z பிளாக் 30 பழைய TS எண் 220 புதிய TS எண் 59 பாண்டுரங்கவிட்டல் தெரு தாதகாப்பட்டி சேலம் 636006/ LBSAL00006720325/ LBSAL00006733195	சொத்து அட்டவணை 1: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட நிலம் அமைந்துள்ள கதவு எண் 66/1 (பழைய கதவு எண் 56) பரப்பளவு 13 ஏக்க